சிறந்த நடத்தைக்கு உங்களிடையே பரஸ்பர போட்டியை ஊக்குவிப்பதற்கு சொர்க்கத்தையும் புவியையும் உருவாக்கியவர் அவரே.

இந்திய ஹஜ் நிதி™

இந்திய ஜகத் அறக்கட்டளை®-யால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.

ஜகத் ஹௌஸ், ஒக்லா விஹார், ஜாமியா நகர், புது டில்லி 110025 (இந்தியா).

hajfundofindia@zakatindia.org ● www.zakatindia.org/HajFund.html

கொள்கை அறிக்கை

1. இந்திய ஹஜ் நிதியில், எந்த ஒரு இந்திய முஸ்லிமும் அவரது பெயரிலோ அல்லது வேறொரு இந்திய முஸ்லிம் பெயரிலோ, அத்தகைய நபரின் வயது அல்லது பாலினம் அல்லது வேறு எந்த அடையாளத்தையும் கருதாது ஒரு ஹஜ் கணக்கு துவங்க வரவேற்கப்படுகிறார்கள்.

விளக்கம்: இந்த விதியில், 'இந்தியன்' என்ற சொல் இந்தியப் பொதுச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளபடி வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியரையும் உள்ளடக்கியதாகும்.

2. யாருடைய பெயரில் ஹஜ் கணக்கு துவங்கப்பட்டுள்ளதோ, அவர் ஹஜ் கணக்கு வைத்திருப்பவர் (HAH) என அழைக்கப்படுகிறார்.

3. ஒரு ஹஜ் கணக்கில் பணம் போடும் ஒருவர் (ஹஜ் கணக்கு இல்லாதவர்) ஹஜ் கணக்கு வைப்பீட்டாளர் (HAD) என அழைக்கப்படுவார்.

4. ரூ. 1000/- (ரூபாய் ஓராயிரம்) அல்லது அதற்கு அதிகமான வைப்புத் தொகை செலுத்துவதன் மூலம் ஒரு HAH அல்லது ஒரு HAD ஒரு ஹஜ் கணக்கைத் தொடங்க முடியும்.

5. ஒரு ஹஜ் கணக்கில் செலுத்தப்படும் தொகை, HAH அல்லது HAD-இன் விருப்பத்திற்கேற்ப முறையாக (குறிப்பாக ஒவ்வொரு மாதமும்) 1,000/-, 2,000/- 3,000/-, 4,000, 5,000/- என்ற அளவிலோ அல்லது ரூ. 1,000/-இன் வேறு மடங்குகளாகவோ இருக்கலாம்.

6. ஒரு ஹஜ் கணக்கில் ரூ. 101,000 (நடப்பிலுள்ள விலைக் குறியீட்டெண், HAH ஹஜ் பயணம் மேற்கொள்வதற்குத் தேவையான குறைந்தபட்சத் தொகை போன்ற காரணிகளின் அடிப்படையில் இந்தத் தொகை ZFIஇன் அறங்காவலர் குழுவால் மாற்றப்படக்கூடும்) அல்லது அதற்கும் அதிகமாக வரவு வைக்கப்பட்ட பிறகு, அவர் தன்னுடைய கணக்கில் குறைந்தபட்ச வைப்புத் தொகையாகிய ரூ. 1,000/-ஐ விட்டுவைத்து, ஹஜ் பயணம் மேற்கொள்வதற்காக ஒரு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் அல்லது ஒரு நூறாயிரம்) வரை அல்லது அதற்கு அதிகமாக (நடைமுறையின்படி) அவரது ஹஜ் கணக்கிலிருந்து எடுத்துக்கொள்ள முடியும்,.

'இந்திய ஹஜ் நிதி' என்பது இந்திய ஜகத் அறக்கட்டளையின் டிரேட்மார்க் பெற்றுள்ளது.

இந்திய ஹஜ் நிதி™

7. அந்தச் சமயத்தில், சரியான HFI செயல்முறையின் வாயிலாக HAH வேண்டிக்கொண்டால், அவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட தொகையை HAH-க்கு அல்லது இந்திய மத்திய ஹஜ் குழு அல்லது

ஒரு இந்திய மாநிலத்தின் ஹஜ் குழு போன்றவற்றுக்கு உடனடியாக வழங்குவதற்கான பொறுப்பை HFI கொண்டுள்ளது.

**8.** இருப்பினும், ஹஜ் கணக்கை செயல்பாட்டில் வைத்திருப்பதற்கு குறைந்தபட்சமாக ரூ. 1,000/- வரவு இருப்பு வைத்திருக்க வேண்டும்.

**9.** HAH தன்னுடைய ஹஜ் பயணத்தை மேற்கொண்ட பிறகும் கூட, HAH அல்லது HAD-இன் விருப்பப்படி அவருடைய ஹஜ் கணக்கில் தொடர்ந்து பணம் போட்டு வரலாம்.

**10.** ஒரு ஹஜ் கணக்கில் ஒரு HAH இன் வரவு இருப்பு:

(a) HFIஇல் தன்னுடைய வரவு இருப்பைப் பயன்படுத்தி ஹஜ் பயணம் மேற்கொள்ள வேண்டிய ஒரு HAH ஐப் பொறுத்தவரை ரூ. 121,000/-ஐத் தாண்டும்போது,அல்லது

(b) HFIஇல் தன்னுடைய வரவு இருப்பைப் பயன்படுத்தி ஹஜ் பயணம் முடித்த ஒரு HAH ஐப் பொறுத்தவரை ரூ. 21,000/-ஐத் தாண்டும்போது,

HAH தன்னுடைய ஷரியத் தோழமையுடைய தனிப்பட்ட காரணங்களுக்காக அதிகபட்சத் தொகையாக ரூ. 20,000/- வரை எடுத்துக்கொள்வதற்கான உரிமையைப் பெற்றுள்ளார்.

நடப்பிலுள்ள விலைக் குறியீட்டெண் போன்ற காரணிகளின் அடிப்படையில் இந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அளவுகள் ZFIஇன் அறங்காவலர் குழுவால் மாற்றப்படக்கூடும்.

11. மேலேயுள்ள விதிகள் 6, 7 மற்றும் 10 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஏதேனும் ஒன்றில் ஹஜ் நிதியை விட்டு பணம் வெளியே சென்றுவிட்டால், HAH அல்லது HAD அத்தகைய தொகையின் பகுதியையோ அல்லது முழுமையுமோ HFI-இல் திரும்பவும் போடுவதற்கு HAH அல்லது HAD விருப்பத்துடன் இருக்கிறார், அவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் எந்த சமயத்திலும் அவ்வாறு செய்வது வரவேற்கப்படுகின்றது.

**12.** (a) எந்த ஒரு சமயத்திலும், HFI-இல் உள்ள மொத்த வரவு இருப்பை ZFI தடையின்றி பயன்படுத்திக்கொள்ளலாம் (அத்தகைய இருப்பின் ஐம்பது சதவீதத்துக்கும் மிகாத வரம்புக்குட்பட்டு)

(i) ZFI இன் சங்கக் குறிப்பாணையின்படி, ஏழைகள் அல்லது வறியோர்கள் நலனுக்காக, அல்லது

**(ii)** உலேமா / மஃப்டிஸ்-ஐக் கலந்தாலோசித்த பிறகு, ஷரியத் தோழமையுடைய முதலீட்டு நோக்கங்களுக்காக.

(b)ZFI-இன் சங்கக் குறிப்பாணையின்படி, அத்தகைய முதலீடுகளின் மூலம் பெறப்படும் அல்லது சேர்ந்துள்ள எந்த ஒரு நிதி ஆதாயமும், ஏழைகள் அல்லது வறியோர்கள் நலனுக்காக பயன்படுத்தப்படும்.

(c) அத்தகைய முதலீடுகள் மூலம் பெறப்படும் எந்த ஒரு இழப்பும், ZFI மூலம் உட்கவரப்படும் / ஏற்றுக்கொள்ளப்படும், மற்றும் HAH அந்த முரண்பாட்டை விரும்பவில்லை எனில், அத்தகைய சாத்தியமுள்ள எந்த இழப்பும் எந்த ஒரு HAH மீதும் திணிக்கப்பட மாட்டாது

இந்திய ஹஜ் நிதி™

13. ஒவ்வொரு HAH-ம் எந்த ஒரு சமயத்திலும் தன்னுடைய ஹஜ் கணக்கை இணையதளம் வாயிலாகவோ அல்லது இதற்காக ZFI-க்கு வழங்கப்பட்ட விண்ணப்பத்தின் வாயிலாகவோ முறையான பாதுகாப்பு மற்றும் தனியுரிமை நடைமுறை பின்பற்றப்பட்ட பிறகு அணுகுவதற்குரிய உரிமையைப் பெற்றுள்ளார்.

14. IHF-இன் பரந்த வரையறைகள் ZFI வலைத்தளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

15. இந்தச் சேவையை மிகுந்த பயனர் தோழமையுடையதாகவும், ஷரியத் தோழமையுடையதாகவும் உருவாக்குவதற்கான மேம்பாட்டு ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

[முடிந்தது]